லாச்சப்பலில்
சங்கீதா
அச்சகம்

# நிலா

சங்கீதா
39, Bld de la Chapelle
Métro : La Chapelle
01 44 72 08 94

தை - மாசி 2010 இது ஒரு கிருஷ்ணா அச்சகத்தின் விளம்பர வெளியீடு இல.1








## சிறுவர் குற்றங்களைத் தடுக்க பிரான்சில் புதிய ஆலோசனை

பிரான்சில் சிறுவர் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை யிட்டு அவற்றைக் கட்டுப்படுத்த அரசும் எதிர்க்கட்சிகளும் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன. இதற்கிணங்க 13 வயதிற்கு குறைந்தவர்கள் செய்யும் குற்றங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் பாராளுமன்றம் விவாதத்திற்காக முக்கிய இரு சரத்துக்களை பரிசீலனைக்கு எடுத்துள்ளது.

(Le Préfet) மாவட்ட ஆணையாளர் தேவையேற்படும் வேளையில் ஊரடங்கு உத்தரவை பிறப்பிக்க அதிகாரம் வழங்குதல் சரத்தின் முதலாவது பிரிவாகும். அடுத்து 13 வயதிற்கு குறைவான பிள்ளைகள் செய்யும் குற்றங்களுக்கு பெற்றோரை கண்காணிப்பாளராக்கும் நோக்கத்துடன் பெற்றோர் பொறுப்பேற்கும் ஒப்பந்தமாகும். இவ் ஒப்பந்தம் (Allocation familiale) குழந்தைகள் தொடர்பான சமூகக் கொடுப்பனவுகளை நிறுத்துவது உட்பட்ட சில சரத்துக்களை கொண்டதாக அமைகின்றது.

குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 22000 கண்காணிப்புக் கமராக்கள் பொதுவீதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் 2011 ஆம் ஆண்டு இறுதிக்குள் இது 3 மடங்காக அதிகரிக்கப்படும் என உள்நாட்டு பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரான்சின் தென்பகுதியில் உள்ள நிஸ்(Nice) நகரம் ஓர் பரீட்சார்த்த நகரமாக தெரிவுசெய்யப்பட்டு 13 வயதிற்கு உட்பட்டோர் இரவு 11 மணியில் இருந்து காலை 5 மணிவரை தனியாக செல்லத் தடை விதிக்கப்பட்டது. இது செவ்வாய், வெள்ளி, சனி இரவுகள் தவிர்ந்த நாட்களில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்நடைமுறை கொண்டுவந்த பின்னர் சிறுவர் குற்றச்செயல்கள் மிகவும் குறைந்துள்ளதாக நகர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நகரம் 1100 பேருக்கு ஒரு பொலிசும் 730 பேருக்கு ஒரு கமராவும் பொருத்தப்பட்ட கூடுதல் பாதுகாப்புக் கொண்ட ஓர் நகரம் என்பது குறிப்பிடத்தக்கது.

## புகலிடம் வழங்குவதில் பிரான்ஸ் முன்னிலை

வேறுநாடுகளில் இருந்து சட்டரீதியாக பிரான்ஸிற்குள் குடிவரும் குடும்பங்களின்(12.3%) வீதமும் தொழில் ரீதியாக உள் வருபவர்களின்(15%) வீதமும் கடந்த 2009 ம் வருடத்தில் குறைந்துள்ளது.

வெளிநாடுகளில் திருமணம் செய்பவர்கள் தொடர்பில் கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமடைந்துள்ளதால் அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைவதற்கு நீண்டகாலம் செல்கின்றது. அத்துடன் குடிவருதல் பொருளாதாரத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதால் நெருக்கடியான இந்த நேரத்தை தவிர்த்து பொருத்தமான நேரம் வரும்வரை ஒன்றிணைவதற்கு பெரும்பாலான குடும்பங்கள் காத்திருக்கின்றன.

இக் காரணங்களினால் குடிவருதலில் ஒரு மறைமுக வீழ்ச்சி காணப்படுகின்றது. பிரான்சில் மட்டுமன்றி ஏனைய அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் குடிவரும் வீதம் குறைந்துள்ளது.

இதே நேரம் 29300 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பிரெஞ்சு அரசு 27000 பேரை திருப்பி அனுப்பவேண்டுமென முடிவெடுத்திருந்த போதிலும் அந்த தொகை அதிகரித்து விட்டது. இவர்களில் 21020 பேர் திருப்பி அனுப்ப கட்டாயப் படுத்தப் பட்டுள்ளனர். விசா மறுக்கப்பட்ட பின் பிரான்சில் ஆகக்கூடியது 32 நாட்களே தங்கியிருக்க முடியும். விசா மறுக்கப்பட்டபின் தொடர்ந்து தங்கியுள்ளவர்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்ட பின், தங்கியிருப்பவர்களிற்காக 11.5 மில்லியன் ஈரோக்கள் வருடத்திற்கு ஒதுக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது.

2009 ஆம் ஆண்டு 47000 பேர் பிரான்ஸில் புகலிடம் கோரியுள்ளனர். இவர்களில் 10864 பேரின் புகலிடம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை விட கடந்த வருடம் 108274 வெளிநாட்டவர்கள் பிரெஞ்சுப் பிரஜாவுரிமை பெற்றுள்ளனர். பிரான்ஸ் புகலிடம் வழங்குவதில் உலகில் இரண்டாவது நாடாகவும், புகலிடம் வழங்குவதிலும், குடியுரிமை கொடுப்பதிலும் ஐரோப்பிய நாடுகளில் முதன்மையானதாகவும் தொடர்கிறது.


கிருஷ்ணா அச்சகம்
தரம் - குறித்த தவணை - குறைந்தவிலை
திருமண பிறந்தநாள் பூப்புனித நீராட்டுவிழா
அழைப்பிதழ்கள்
மற்றும் சகலவிதமான
அச்சக வேலைகளுக்கும் நாடுங்கள்!
Tél. : 01 42 51 29 92
Fax : 01 42 51 35 25
www.krishna87.com
E-mail: krishnafrance@yahoo.com
73, Rue Doudeauville - 75018 PARIS Métro : CHÂTEAU ROUGE

## சிகரெட்டும் வெடிக்குமாம்!



இந்தோனேசிய தலைநகர் ஜகார்தா புறநகரான பெகாசியில் வசிப்பவர் ஆன்டே சுசான்டோ. 31 வயது நிரம்பிய இவர் சிகரெட் புகைத்தபடி சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, திடீரென சிகரெட் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

வாயில் படுகாயம். 6 பற்கள் உடைந்தன. வாய்க்குள் சதை கிழிந்து ரத்தம் கொட்டியது. உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு வாயில் 51 தையல்கள் போடப்பட்டன.

சிகரெட் வெடித்து படுகாயம் ஏற்படுத்தியதால் அதைத் தயாரித்த புகையிலை நிறுவனம் மீது இழப்பீடு கேட்டு வழக்கு தொடர விருப்பதாகவும் தெரிகிறது.

## ரகுமானுக்கு மேலும் விருதுகள்



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு, ஸ்லம் டாக் மில்லினர் திரைப்படத்துக்கு, இசையமைத்ததற்காக இரண்டு கிராமி விருதுகள் வழங்கப் பட்டுள்ளன. சர்வதேச அளவில் சிறந்த இசைக்கு ஒவ்வொரு ஆண்டும், அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல் நகரில் கிராமி விருதுகள் வழங்கப்படுகின்றன.

அமெரிக்காவில் உள்ள நேஷனல் அக்கடமி ஆப் ரெக்கார்ட்டிங் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் என்ற அமைப்பு, கடந்த 1958ம் ஆண்டு முதல் இந்த விருதுகளை வழங்கி கவுரவித்து வருகிறது. கிராமபோன் விருது என்றழைக்கப்பட்ட இந்த விருது, தற்போது கிராமி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

ஏ.ஆர்.ரகுமான், கடந்த ஆண்டு ஸ்லம் டாக் மில்லினர் என்ற படத்துக்கு இசையமைத் திருந்தார். இந்த படத்தில், அவருடைய பின்னணி இசைக்கு ஒரு விருதும், ஜெய்ஹோ என்ற பாடலை இசையமைத்ததற்கு மற்றொரு விருதும் வழங்கப்பட்டது. இதே படத்துக்காக, ரகுமானுக்கு கடந்த ஆண்டு ஆஸ்கார் விருது கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ரகுமான் குறிப்பிடுகையில், இந்த விருதுகள் எல்லாம் கிடைத்ததற்காக, நான் ஹாலிவுட்டுக்கு தாவிவிட மாட்டேன். தொடர்ந்து இந்தியப் படங்களுக்கு இசையமைப்பேன். இசைக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில், தந்தை போன்றது இந்த கிராமி விருது. இந்த விருதை பெற்றதன் மூலம், எனக்கு பொறுப்புகள் கூடியுள்ளன. திரை இசையில், இன்னும் புதிய யுக்திகளை கையாளுவேன் என்றார். இந்த விழாவில், மறைந்த பாப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சனுக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

## மிகப்பெரும் சிக்கலில் Toyota நிறுவனம்

உலகின் மிகப்பெரிய கார் உற்பத்தி நிறுவனமான Toyota தமது வாகனங்களின் வேகத்தை அதிகரிக்க உதவும் ஆக்சிலேட்டர் பெடல்களில் பிரச்சினைகள் இருந்ததால் எண்பது லட்சம் வாகனங்களை மீளப்பெற எடுத்த முடிவுக்கு பிறகு அதற்கு மேலும் ஒரு பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பெற்றோல் மற்றும் இயற்கை வாயு ஆகியவற்றின் கலப்பில் ஓடும் Toyota வின் புதிய அறிமுகமான பிரியஸ் எனும் மாடல் கார்களின் பிரேக்குகளில் பிரச்சினை இருப்பதாக அந்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

அந்த வகையான காரின் பிரேக் செயற்பாட்டின் வடிவமைப்பை தாங்கள் மாற்றியமைத்துள்ளதாக கூறும் Toyota ஏற்கனவே சாலைகளில் ஓடிக்கொண்டி ருக்கும் வாகனங்களை எப்படி சரி செய்வது என்பது தொடர்பிலான நடவடிக்கைளும் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. எனினும் இந்த சிக்கலால் பாதுகாப்பு தொடர்பான அபாயம் ஏதும் கிடையாது என்றும் அதை சுலபமாக சரி செய்துவிடலாமென்றும் அந்த நிறுவனம் கூறுகிறது.

ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கும் தமது வாகனங்களை திரும்பப் பெறநேர்ந்தது அந்த நிறுவனத்திற்கு இரண்டு பில்லியன் டொலர்கள் இழப்பை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளது. இதே காரணத்திற்காக பிரான்ஸின் தயாரிப்பான கார் தயாரிக்கும் நிறுவனமும் C1 ரகத்திலான கார்களை திரும்பிப் பெற உத்தேசித்துள்ளது.

## புளூட்டோ கிரகம் சிவப்பாக மாறுகிறது!

சூரியனைச்சுற்றி பூமி உட்பட பலவேறு கிரகங்கள் சுற்றி வருவதாக படித்திருக்கிறோம். அவற்றில் ஒன்றான புளூட்டோ கிரகம் சூரியனை 248 ஆண்டுகளாக சுற்றி வருகிறதாம். தற்போது அது பிரகாசமாகவும் சிவப்பாகவும் மாறி வருவதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசா தெரிவித் துள்ளது. விண்வெளியில் சுற்றி வரும் ஹப்பிள் டெலஸ்கோப் எடுத்த படங்களின் அடிப்படையில் இக்கருத்தை நாசா தெரிவித்துள்ளது.

புளூட்டோ கிரகத்தில் சூரிய ஒளி படும் துருவத்தின் மேற் பரப்பில் உள்ள பனிக்கட்டி உருகு வதாலும், அதன் எதிர் துருவம் உறைவதாலும் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நாசா மேலும் தெரிவிக்கிறது.



ரூபி

Tél.: 01 42 51 80 78

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ பிரதிகளை நீண்ட காலத்திற்கு பாதுகாக்க விரும்புகின்றீர்களா?
சீடி தட்டுக்களில் இலகுவாக மாற்றித்தருகிறோம்.
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!

10, RUE LABAT - 75018 PARIS
M°: Marcadet Poissonniers

# பிரான்ஸில் முக்காடு அணிவதற்குத்தடை(!)



பிரான்ஸில் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பொதுப்போக்குவரத்து உள்ளிட்ட பொதுவிடங்களில் முஸ்லிம் பெண்கள் நிகாப் எனப்படுகின்ற முகத்தை மூடும் முக்காடுகளை அணிவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என நாடாளுமன்ற நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

கடும்போக்கு மதவாத பின்பற்றல் என்று தாங்கள் கூறும் ஓர் விடயம் தொடர்பில் வெளிப்படையான சின்னங்களை அணிகிற அல்லது பயன்படுத்துகிற எவருக்கும் பிரான்ஸில் தங்குவதற்கான வதிவிட அட்டைகள், குடியுரிமை போன்றவற்றை வழங்கக்கூடாது என்றும், சட்டத்தை மீறுபவர்கள் மீது 750 ஈரோக்கள் அபராதம் விதிக்கப்படவேண்டும் எனவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.

பெண்கள் முகத்திரை அணிய வேண்டும் என்று கூறுவது பிரஞ்சுக் குடியரசின் விழுமியங்களான மதச்சார்பின்மை, சமத்துவம் போன்ற கொள்கைகளுக்கு முரணாக அமைந்துள்ளது என இந்தக் குழுவின் பரிந்துரை அறிக்கை கூறுகிறது.

இது ஒரு தேவையற்ற விவாதம் என்றும், அவரவர் விருப்பப்படியே அவர்களை விட்டுவிடலாம். நாட்டில் இதை விட முக்கியமான பல பிரச்சினைகள் முன்னே விரிந்து கிடக்கின்றன என்கிறார் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர் Marie-George Buffet...

இன்னொரு தலைவரான André Gerin, தனது நேர்காணல் ஒன்றில், இது ஒன்றும் மதப்பிரச்சினையோ அல்லது மதத்திற்கு எதிரானதோ அல்ல என்றும், பெண்களை அடக்குமுறையிலிருந்து விடுவிப்பதையும், பிரெஞ்சு சமூகத்தில் மனிதர்களை வேறு படுத்திக் காட்டுவதைத் தவிர்ப்பதையும் இன்னும் பாதுகாப்பு பிரச்சினைகளையும் நோக்காகக்கொண்டது என்கிறார். இதை முக்காடு அல்லது முகமூடியாகவும் கொள்ளலாம் என மேலும் தெரிவிக்கிறார்.

இந்த முகமூடி அணிந்தமனிதர்கள் படிப்படியாக பிரான்சில் பெருகிக்கொண்டே வருகிறார்கள். இது ஒரு நாகரீகமாகவும் பிரான்சில் பரவிவருகிறது. பிரெஞ்சுப்பெண்களும் இதன்பால் ஈர்க்கப்படுகிறார்கள். முகமூடி மனிதர்களுடன் வாழுவது அவ்வளவு சுலபமானதல்ல. இது நாட்டின் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாக விளையும் எனவும் அவர் மேலும் அச்சம் தெரிவிக்கிறார்.

காலகளே இல்லாதவனை
தெருவில் காணும்வரை
செருப்பில்லையே என்று
கவலைப்பட்டுத் திரிந்தேன்

# கூகுள் முதலிடம்

இணையத்தில் தகவல்களைத் தேடுவதில் நமக்குப் பயன்படும் தேடல் இயந்திரத்தை வடிவமைத்தவர்கள் கூகுள் நிறுவனத்தினர். பல லட்சம் பாவனையாளர்களின் நன்றிக்குப் பாத்திரமானது இந்த நிறுவனம். கூகுள் நிறுவனம் தன் தேடல் பொறியினை வழங்கு முன்பே தேடல் பொறி வேறு நிறுவனங்களால் இயக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் கூகுளின் வேகம், தேடல் வகை அதற்கு ஒரு தனி இடத்தைக் கொடுத்துள்ளது.

Google
teracent

இப்போது ஸ்மார்ட் போனில் மேற்கொள்ளப்படும் தேடலிலும் தான் முதல் இடம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் கூகுள் காய் நகர்த்துகிறது. அட்மாப் மற்றும் டெராசென்ட் (AdMob and Teracent) என்ற இரு நிறுவனங்களை அண்மையில் கூகுள் வாங்கியதன் மூலம் ஸ்மார்ட் போன் தேடலிலும் தன் இடத்தை வலுவாக கூகுள் அமைத்துள்ளது.

இன்டர்நெட் தேடலைப் பொறுத்தவரை கூகுள், சென்ற டிசம்பர் மாதம் மொத்த தேடலில் 70 சதவீதம் கொண்டிருந்தது. மொத்தம் மேற்கொள்ளப்பட்ட 13 கோடியே 10 லட்சம் தேடலில், 8 கோடியே 80 லட்சம் தேடல்கள் கூகுள் வழியே மேற்கொள்ளப்பட்டன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 58 சதவீதம் கூடுதலாகும். இது கூகுள் பெரிய அளவிலான இடத்தைக் கொண்டிருப்பது மட்டுமின்றி, இந்த பிரிவில் வேகமாகவும் வளர்ந்து வருகிறது என்பதுதான். தன் நிலையை இன்னும் வலுவாக்க சோஷியல் நெட்வொர்க்கிங் தளங்களுடன் கூகுள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

## பிரான்ஸில் இருப்பிடவசதி பற்றாக்குறை அதிகரிப்பு.

பிரான்ஸில் இருப்பிடவசதி பற்றாக்குறை 2008 ம் ஆண்டைவிட 2009ம் ஆண்டில் அதிகரித்துள்ளது.



ஆறுக்கு ஒரு வீதமான பிரெஞ்சுக் குடியிருப்பாளர்கள் வசதிகுறைந்த வீடுகளில் அல்லது வசிப்பதற்கு வீடுகள் இல்லாத நிலையிலேயே வாழ்கின்றனர். 2009 ல் கிட்டத்தட்ட 600.000 சிறுவர்கள் இவ்வசதிக் குறைவினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சுகாதாரக்குறைவு, காற்றோட்ட வசதியின்மை, படுப்பதற்கு வசதியின்மையின்மையால் நித்திரைக்குறைவு போன்ற காரணங்களினால் இவர்கள் அவஸ்தைபடுகிறார்கள்.

❍

# ஏழை போல இருங்கள்!

ஆஸ்திரேலியாவிலும் இந்தியர்கள் இனவெறி தாக்குதலுக்கு ஆளாவதாக தொடர்ந்து செய்திகள் வந்தவண்ணம் உள்ளது. இதில் பெரும்பாலானவை பாரிஸில் நடைபெறுவதைப்போன்று, இரவு நேரத்தில் தனியாக செல்லும் மாணவர்களை குறிவைத்து நடாத்தப்படும் வழிப்பறி சம்பவங்கள் தான் என தெரிவிக்கப்படுகிறது.

பலவித முறைப்பாடுகளை அடுத்து, இதுபோன்ற தாக்குதலில் இருந்து இந்திய மாணவர்கள் தப்பிக்க, விலை உயர்ந்த பொருட்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ஏழைகளைப் போன்ற தோற்றத்துடன் திரியுமாறு விக்டோரியா மாகாண போலீஸார் இந்தியர்களுக்கு அறிவுரை கூறியுள்ளதாக அறியமுடிகிறது.

இதுகுறித்து விக்டோரியா காவல்துறை தலைமை ஆணையர் சிமோன் ஓவர்லேண்ட் பத்திரிகை பேட்டி ஒன்றில் கூறியிருப்பதாவது,

இந்திய மாணவர்கள் தங்கள் மீதான வன்முறையை தவிர்க்க, தங்களால் எவ்வளவு முடியுமோ அந்தளவுக்கு ஏழைகளைப் போல காட்டிக்கொள்ளுங்கள்.

விலை உயர்ந்த எலெக்ட்ரானிக் உபகரணங்கள், கடிகாரம், ஆபரணங்கள் போன்றவற்றை வெளியே தெரியும் வகையில் வைத்திருக்காதீர்கள். இதன் மூலம் ஓரளவு வழிப்பறி போன்ற வன்முறை தாக்குதல்களில் இருந்து தப்பிக்கலாம்.

நேரம் கடந்த பயணங்களை தவிர்க்க எங்கு பாதுகாப்பாக இருக்க முடியுமோ அங்கேயே தங்கிவிடலாம். சர்வதேச அளவில் பெரிய இனப் பிரச்சனைகளை கிளப்பும் இந்த வன்முறை தாக்குதல்களை சமாளிக்க மாணவர்களும் தங்கள் தரப்பில் சில முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.




# சுவிஸ் வங்கி, இரகசிய விபரங்கள் கசியுமா?.




சுவிஸ் வங்கிகளில் உள்ள ரகசியக் கணக்கு தகவல்கள், சிடி மூலம் கசியும் வாய்ப்பு உருவாகியிருப்பதால், சுவிட்சர்லாந்து நாட்டுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இலங்கை, இந்தியர்கள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த ஏராளமானோர் , தங்கள் கறுப்பு பணத்தை, சுவிட்சர்லாந்தில் உள்ள வங்கிகளில் போட்டு வைத்துள்ளனர். இவர்களை பற்றிய விவரங்களை, சுவிஸ் வங்கிகள் வெளியிடுவதில்லை. பொதுவாக எந்த வங்கிகளுமே வெளியிடுவதில்லை. அவற்றை ரகசியமாக வைத்திருக்கும். இந்நிலையில், வரி ஏய்ப்பாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்து வரும் ஜெர்மனி அரசு, சுவிஸ் வங்கிகளில் பணத்தை வைப்புச்செய்துள்ள தங்கள் நாட்டவர்களின் பெயர்களை வெளியிட வேண்டுமென வற்புறுத்தி வருகிறது. இதற்கு சுவிஸ் அரசாங்கமும், வங்கிகளும் செவி சாய்க்கவில்லை. முதலில் அமெரிக்கா போட்ட அதிரடி சட்டம், அதற்கு அடுத்த நடவடிக்கைகளால் தன்னிடம் கணக்கு வைத்திருக்கும் சில அமெரிக்கர் பெயர் பட்டியலை வெளியிட, சுவிஸ் வங்கிகள் முன்வந்தன. அந்த நடவடிக்கைகள் முடிவடையும் முன், ஜெர்மனியும் சில ஐரோப்பிய நாடுகளும் அடுத்தடுத்து தகவல் திரட்ட முன்வந்திருக்கின்றன. சுவிட்சர்லாந்தின் கெடுபிடி கண்டு எரிச்சலடைந்துள்ள ஜெர்மன் அரசு, தங்கள் நாட்டில் வரி மோசடி செய்து, சுவிஸ் வங்கிகளில் பணம் போட்டு வைத்துள்ளவர்களின் பெயர் மற்றும் விவரங்களை, சிலர் வழியாக ரகசியமாக, சிடி மூலம் பெறப் போவதாகக் கூறியுள்ளது.



சின்னட்டிக் கதை

# மருவல்

ஆறே வயதான என் சுட்டிப்பெண் ஓடி வந்தாள்.

அப்பா `சம்தி` என்னை ரெண்டு கடேக்கு கூட்டிகொண்டு போகவேணும்மென்றாள் மழலைத்தமிழில்.
அதற்கென்ன? எந்தக்கடை என்றேன்.

ஒண்டு `லே கால்` (சப்பாத்துக்கடை) ம். ஓகே.
மற்றது ...!
மற்றது `ஆடியோ(ன்).`
இதென்னடா புதுக்கடையா இருக்கு!
அது எங்க இருக்கு என்றேன்.
அனித்தா வீட்டுக்கு பக்கத்தில.. அந்த பொம்போம் எல்லாம் இருக்கெண்டு அனித்தா சொன்னவா.. என்று நிறுத்தினாள்.

ஆ..டி..யோ(ன்). . . அ..டி..யோ(ன்). .. என்று நானும் மனைவியும் திரும்பத்திரும்ப உச்சரித்ததில் ஒரு மாதிரி கண்டுபிடித்துவிட்டோம் அந்த `அடையான்` கடையை.

நாங்கள் சிரித்து முடித்து நிதானித்து `அடையான்` என்ற சொல் அல்ஜீரியநாட்டவரைக்கு குறித்து எம்மவர்களால் பயன்படுத்தப்படும் ஒரு வேண்டாத சொல்லே. அப்படிச்சொல்லக்கூடாது என்று அவளுக்கு புரிய வைத்தபின்னும் சிரித்தோம்.

— ரா.ரா.

உங்கள்
போட்டோ கொப்பி
தேவைகளுக்கு
நாடுங்கள்!

கறுப்பு வெள்ளை மற்றும் கலர்

**RUBIS**
10, Rue Labat
**Métro : Marcadet Poissonniers**

# உலக கோப்பை கால் பந்து 2010

**Jabulini**

2010 உலககோப்பைக்கான காற்பந்து Jabulini என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது. தென்னாபிரிக்காவில் பெரும்பான்மையாக உள்ள Zulu இன மக்களின் மொழியான isZulu இல் இருந்து பிறந்த சொல்லே Jabulini. Jabulini என்பது IsZulu மொழியில் அனைவருக்கும் சந்தோசத்தை கொண்டுவருதல் என பொருள்படும். சிறப்புபந்தான Jabulini, Adidas company இனால் வடிவமைக்கப்பட்டது. குழுவின் ஒவ்வொரு வீரரையும் வெவ்வேறு நிறங்களால் வேறுபடுத்தும் வகையில் Jabulini பதினொரு நிறங்களால் ஆக்கப்பட்டுள்ளது.

Adidas Company, 1963 இல் இருந்து காற்பந்தினை வடிவமைக்க தொடங்கியது. இருந்தபோதும் முதன்முதலாக 1970 ஆம் ஆண்டு உலக கோப்பைக்கான காற்பந்து Telstar இனை தயாரித்தது. இவ் ஆண்டே முதன்முதலில் காற்பந்தாட்டம் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

<u>2010 காற்பந்தாட்ட உலக கோப்பைக்கான பரிசுத்தொகை</u>

2010 உலககோப்பைக்கான காற்பந்தாட்டப்போட்டி தென்ஆபிரிக்காவில் யூன் 11 இலிருந்து யூலை 11 வரை நடைபெறவுள்ளது. உலக கோப்பையினை கைப்பற்றும் அணி பரிசுத் தொகையாக 30 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ளும்.

இரண்டாம் இடம் பெறும் அணி 24 மில்லியன் டொலர்களையும், அரையிறுதிக்கு தெரிவாகும் அணி 20 மில்லியன் டொலர்களையும் காலிறுதிக்கு போகும் அணி 18 மில்லியன் டொலர்களையும் இரண்டாவது சுற்றுக்கு செல்லும் அணி 9 மில்லியன் டொலர்களையும் முதலாவது சுற்றில் பங்குகொள்ளும் அணி 8 மில்லியன் டொலர்களையும் பெற்றுக் கொள்ளும். தகுதிபெறும் ஒவ்வொரு அணிக்கும் உலககோப்பைக்கான தயார்படுத்தலிற்காக 1 மில்லியன் டொலர்கள் வழங்கபடும்.

கடந்த 2006 உலககோப்பை காற்பந்தாட்ட பரிசுத்தொகையை விட இந்த வருட பரிசுத்தொகை 61% உயர்வாக, 420 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

# <u>கைப்பந்து</u>

## பிரான்ஸ் சாம்பியன்



பிரான்ஸ் கைப்பந்து அணியான «Les Experts» முதல்முறையாக ஒலிம்பிக், உலக மற்றும் ஐரோப்பிய சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

# கிரிக்கெற்



## பந்தைக் கடித்தார் அப்ரிடி!

பெர்த்தில் நடைபெற்ற அவுஸ்ரேலியாவிற்கு எதிரான இறுதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் போது பாகிஸ்தான் கேப்டன் ஷாகித் அப்ரிடி, பந்தை கடித்து சேதம் செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு இரண்டு இருபது ஓவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் தடைசெய்யப்பட்டுள்ளார். கிரிக்கெற் விதிமுறைகளின் படி ஒரு பந்தினை சேதப்படுத்துதல் (பந்தினை தரையில் தேய்த்தல், நகத்தினால் சுரண்டுதல், கூர்மையான ஆயுதத்தால் சேதப்படுத்துதல்) மிகப்பெரிய தவறாகும். இத் தவறினை அப்ரிடி மட்டுமன்றி பல முன்னணி வீரர்களும் செய்துள்ளனர்.

*1976* — John Kenneth Lever (இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர்) பந்தில் வசிலீன் தடவியதாக குற்றம்சாட்டப்பட்டார்.

*1992* — Wasim Akram (பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர்) — போத்தல் மூடி மூலம் பந்தை சேதப்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டார்.

*1994* — Michael Atherton (இங்கிலாந்து கப்டன்) — பொக்கற்றில் இருந்த சேற்றினால் பந்தை சேதப்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டார்.

*2000* — Waaqar Younis (பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர்) — முதன்முறையாக பந்தை சேதப்படுத்தியதற்காக தடைசெய்யப்பட்டார்.

*2001* — Sachin Tendulkar — பந்தை சேதப்படுத்தியதற்காக தடைசெய்யப்பட்டார்.

*2004* — Rahul Dravid — பந்தை சேதப்படுத்தியமைக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

*2006* — பாகிஸ்தான் அணி — இங்கிலாந்திற்கெதிராக நடைபெற்ற ஐந்துநாள் போட்டியில் பந்தை சேதம் செய்தமைக்காக குற்றம் சாட்டப்பட்டது.

# T20 Cricket



ஒரு டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முன் ரசிகர்களை ஈர்க்க இருபது ஓவர் கிரிக்கெட்டை பயன்படுத்துங்கள். அதனை அதிகமாக பயன்படுத்தி ஓவர்டோஸ் கொடுக்காதீர்கள் என்று இருபது ஓவர் கிரிக்கெட்டை கண்டுபிடித்த ஸ்டுவர்ட் ராபர்ட்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார். தனது கருத்தான இருபது ஓவர் கிரிக்கெட்டிற்கு இவ்வளவு பெரிய வரவேற்பு கிடைப்பது தனக்கு உற்சாகமளித்தாலும் அதனை அதிகமாக கொடுத்து கிரிக்கெட்டை அழித்துவிட வேண்டாம் என்று அவர் கிரிக்கெட் வாரிய அமைப்பாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு கூட்டம் வராததையடுத்து ஒரு உற்சாகத்தை கொடுப்பதற்காக தொடர் தொடங்குவதற்கு முன் ஓரிரு இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகளை நடாத்தலாம். அதில் தப்பில்லை. ஆனால் அதையே ஒரு பிழைப்பாக வைத்துக் கொண்டிருப்பது தவறு என்று கூறியுள்ளார் ராபர்ட்சன்.

தொகுப்பு — ஜெகன்




## பிரான்சில் விற்பனைக்கு தடை!


**Ketum** எனும் இம்மருந்து பிரான்ஸில் வதியும் அநேகதமிழ்மக்களின் வீட்டிலும் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. கை, கால் மூட்டுக்களில் நோ என்றால் உடனே இந்த மருந்துதான் சர்வலோக நிவாரணி. நோ உள்ள இடங்களில் பூசிவிட்டால் நோ மாயமாய் மறைந்துவிடும். பிரான்சில் 15 வருடங்களாக பாவனையிலிருந்த மருந்து தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. இம் மருந்தால் நோயாளிகளுக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டதே தடைக்குக் காரணம். அலேர்ஜிக் மற்றும் எக்சிமா போன்ற தோல் வியாதிகள் இம்மருந்தால் ஏற்பட்ட தாக அவதானிக்கப்பட்டு கடந்த தை 12 இல் இருந்து பிரான்சின் மருந்து கடைகளில் இம்மருந்து விற்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

## Grippe – A பன்றிக்காய்ச்சல்



பன்றிக்காச்சல் பரவத்தொடங்கி ஆறுமாதகாலமாகியும் இன்னும் அந்த அலை ஓய்ந்தபாடில்லை. இதைக்கட்டுப்படுத்த ஒவ்வொரு நாட்டின் மருத்துவத்துறையும் படாதபாடு படுகிறது. கிட்டதட்ட 200 நாடுகளில் இந்த பன்றி காய்ச்சலினால் 14711 பேர் இறந்துள்ளனர். அதிகமாக அமெரிக்காவில் 7166பேரும், ஐரோப்பாவில் 3429பேரும், ஆசியாவில் 2981பேரும், இறந்துள்ளனர்.

பிரான்சில் 285பேர் இறந்துள்ளனர். 1266பேர் கடுமையாக பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். 5.741.553 பேர் இந்த நோய்க்கு தடுப்பு ஊசி மருந்து பெற்றுள்ளனர். ஆனால் இத்தொகை மொத்த சனத் தொகையில் 9% ஆகும். இங்கு இதன்பாதிப்பு குறைந்து வருகின்ற போதிலும் பொதுமக்கள் மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறு தொடர்ந்தும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.




மேலேயுள்ள விளம்பரத்தை — நீல வர்ணத்தில் — பாரிஸ் விளம்பரப் பலகைகளில் பார்த்திருப்பீர்கள். ரைரானிக் படத்தை இயக்கிய ஜேம்ஸ் கமரோனின் அடுத்த மிகப்பெரிய தயாரிப்புதான் இந்த Avatar . ரைரானிக் படம் வெளிவந்து சுமார் 12 வருடங்களின்பின் இப்படம் வெளிவந்திருக்கிறது. இவர் இயக்கிய அனைத்து படங்களும் தொழில் நுட்பரீதியாக பிரசித்தி பெற்றவை.

Avatar ன் தொழில் நுட்பமும் பிரமிக்கவைத்திருப்பதாக விமர்சகர்கள் எழுதுகிறார்கள்.

படத்தின் தயாரிப்புச் செலவு சுமார் 460 மில்லியன். இதில் 150 மில்லியன்கள் விளம்பரத்துக்காக செலவிடப்பட்டது.

படத்தில் வரும் பாத்திரங்கள் விஷ்ணு அவதாரங்கள் போல அமைக்கப் பட்டிருக்கின்றன.

விஷ்ணு பல அவதாரங்களில் தோன்றினார். கிருஷ்ணன், கல்கி, பரசுராமன், ராமன், நரசிம்மன் போன்றன விஷ்ணுவின் அவதாரங்கள் என கூறப்படுவதுண்டு. இதன் அடிப்படையில் தான் நாவி என்ற இனம் உருவாக்கப்பட்டதாக இயக்குனர் ஒரு நேர்காணலில் தெரிவித்திருக்கிறார்.

படத்தைப்பார்த்தவர்கள் இதென்ன நம்ம படமா என்று மூக்கில் விரலை வைக்கிறார்களாம். ஆமாம் ரைற்றானிக்கும் நம்ம படம்தானே!



சின்னட்டிக்கதை

## நாளை?

ஒருநாளல்ல இரண்டு நாளல்ல, கிழமை மாதங்களாக இது நடந்துகொண்டே வருகிறது. ஒவ்வோருநாளும் நினைப்பதும் பின் நாளை என்றுவிட்டு நான் நகர்வதும்.

பாதாள குகையை விட்டு நான் மேலெழுந்ததும் என் கண்ணில் படுபவள் அந்தக்கிழவிதான். குளிர் வெயிலெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டாய் தெரியவில்லை. சய ஏழு டிகிரியிலும் அப்படியே இருந்தாள். ஆச்சர்யந்தான்.!

பிச்சை கேட்கும் எல்லோரிற்கும் கொடுக்கவேண்டும் போல் எனக்குத் தோன்றுவதில்லை. ஆனால் அந்தக்கிழவிக்கு மட்டும் கொடுக்கவேண்டுமென தினம் மனம் உந்தும்.

பொக்கற்றினுள் கைவிட்டுஎடுக்க அலுப்பு, அல்லது வேலை அவசரம் அல்லது — இனியேன் ஒழிப்பான் — எனது கஞ்சல்தனம் என்று ஏதோ காரணம் இருக்க நழுவிவிடுவேன்.

ஆனால் அன்றைக்குமட்டும் மெத்ரோவைவிட்டு இறங்கும் போதே தீர்மானித்துவிட்டேன். இன்றைக்கு எப்படியும் கொடுத்துத்தான்தீருவதென்று. சில்லறைகளைத் துளாவி எடுத்துக்கொண்டு ஒரு ராஜநடை நடந்தேன்.



கிழவியைக்காணவில்லை. அந்த இடத்தில் பூக்கொத்துக்கள் சில மௌனமாகக் கிடந்தன. எனது நடைசோர்ந்தது. வானத்தை வெறித்தபடி நடந்தேன். — ரா.ரா.



# Super Nanny

**S**uper Nanny தனது 47வது வயதில் மரணமடைந்துவிடுவார் என்று நாங்கள் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. Super Nanyயின் இழப்பு குடும்பத்தில் ஒருவரை இழந்ததுபோல எங்களுக்கு மிகப்பெரிய இழப்பாக இருந்தது.

ஏறத்தாள எட்டுஆண்டுகளுக்கு மேல் Super Nanny எங்களோடு நெருக்கமாக இருந்தார். Super Nanny யிடமிருந்து பெறுமதிமிக்க நல்லபல விடயங்களை நாங்கள் கற்றுக்கொண்டோம். குடும்ப உறவுகளுக்கிடையிலான ஆழங்கள் பலவற்றைப்புரிந்து கொண்டோம். ஆரம்பத்தில் எங்கள் பிள்ளைகளுக்கு Super Nanny பிடிக்காமலே போகலாம் என்ற பயம் எங்களுக்கிருந்தது. ஆனால் அவர்களோ மாறாக Super Nanny யை விரும்பி ரசித்தார்கள். Super Nanny யோடு ஐக்கியமானார்கள். ஒவ்வோரு வாரமும் தொலைக்காட்சியின் M6 அலைவரிசையின் முன் அந்தநேரத்திற்கு தாங்களாகவே குந்திவிடுவார்கள். Super Nanny தொடர்பாக மரியாதை கலந்தபயமும், இறுக்கமான பாசமும் அவர்களைத்தொற்றிக்கொண்டது. அவர்கள் செயல்களில் அவர்களையறியாமலே நல்ல பல மாறுதல்கள் தோன்றின.

யார் இந்த Super Nanny? Cathy Sarraï என்னும் இயற்பெயர்கொண்ட Super Nanny சணல் 6 (M6) பிரெஞ்சுத் தொலைக்காட்சியில் Super Nanny என்றொரு நிகழ்ச்சியை நடாத்திவந்தார். இவர் துனிஷியாவை பூர்வீகமாகக்கொண்டவர். மூன்று குழந்தைகளுக்கு தாயானவர்.

பிரான்ஸில் , குறும்புகள், குழப்படிகள் செய்யும் குழந்தைகள் பெற்றோரால் கட்டுப்படுத்த முடியாது. கட்டுக்கடங்காது திமிறும் குழந்தைகள், நல்வழிப்படுத்த வழிதெரியாது தவித்துநிற்கும் பெற்றோர்களுக்கான நிகழ்ச்சி. சிறுவர்களுக்கான நிகழ்ச்சிபோல இது வெளித்தெரிந்தாலும் உண்மையில் இது பெற்றோர்களுக்கான நிகழ்ச்சிதான்.

குடும்பத்தினரின் அழைப்பின் பெயரில் Super Nanny அவர்களின் வீட்டிற்குச்செல்வார். முதல் மூன்றுநாட்களும், குழந்தைகளின் குழப்படிகளையும், பெற்றோரின் அணுகுமுறைகளையும் உன்னிப்பாக அவதானிப்பார். மூன்றாம் நாள் முடிவில் எல்லோரையும் ஒன்றாக வைத்து பிரச்சினைகளை மெதுவாக அலசுவார். பெற்றோருடன் கலந்துரையாடுவார். பெற்றோர்களுக்கு சில கேள்விகள் சங்கடத்தைத்தான் கொடுக்கும். என்ன செய்வது! பின்னர் சில ஒழுங்குமுறைகளை மிக மென்மையாக கரும்பலகை ஒன்றில் எழுதுவார். அதன்படி ஒவ்வோருவரும் ஒழுகவேண்டும். Super Nanny அவர்கள் குடும்பத்தில் ஒருவர்போல அங்கிருந்து அவதானித்தபடி நெறிப்படுத்துவார். பிள்ளை வளர்ப்பில் பெற்றோர்களின் பங்கு உளவியல்ரீதியாக அங்கு உணர்த்தப்படும். அடம்பிடிக்கும் குழந்தைகளுக்கு மென்மையான தண்டனைகளும் உண்டு. ஒரு வாரத்தில் எல்லாமே தலைகீழ் மாறுதல்களாக இருக்கும். மந்திரத்தால் கட்டுண்ட பிள்ளைகள் போல் மாறியிருப்பார்கள். உணர்ச்சிக்கொந்தளிப்பால் பெற்றோர் கண்கள் கசியும். ஒரு வாரத்தில் Super Nanny வீட்டைவிட்டு புறப்படும் காட்சி உருக்கமானதாக இருக்கும். எவ்வளவோ குழப்படிக்காரப்பிள்ளைகள், பிரிவைத்தாங்காது சோகத்தில் துவள்வர். M6 நடாத்தும் அருமையானஒரு நிகழச்சி. வாராவாரம் ஒவ்வோரு குடும்பத்தினர். ஒவ்வொரு புதுப்புது பிரச்சினைகள். புதிய புதிய தீர்வுகள்.

Super Nanny யின் இழப்பு எங்களுக்கு இழப்புத்தான். Super Nanny க்கு எங்கள் குடும்பத்தினரின் அஞ்சலிகள்.

— மாசிலன்

## பிரான்ஸில் தமிழ் நிகழ்வுகள்

### பொங்கல் விழா

பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின் பொங்கல்விழா 17.01.2010 அன்று பாரிஸ் ஒபேவில்லியேயில் கொண்டாடப்பட்டது.

### நூல் வெளியீடு

ஆசிரியர் சச்சிதானந்தம் அவர்களின் தெளிவான பிரெஞ்சு இலக்கணம் எனும் நூல் 16.01.2010 சனிக்கிழமை Maison de l'Inde மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

### நூல் அறிமுகமும் பாராட்டுவிழாவும்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஈழத்தில் நாடகமும் நானும் என்னும் நூல் அறிமுகமும் பல்துறைக்கலைஞர் பரா அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி, பாராட்டு நிகழ்வும் Sachchi Education Center கலைக்கூடத்தில் 30.01.2010 சனிக்கிழமை நடைபெற்றது.

### வெள்ளிவிழா கலைமாலை

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் வெள்ளிவிழா கலைமாலை 31.01.2010 ஞாயிறு பாரிஸில் நடைபெற்றது.



## மழையும் நானும்

அடை மழை !
நனைந்து விடுவோமோ
என்ற பயத்தில்
நீயும் !
நீ
நடந்தால்
உன்னோடு சேர்ந்து
மழையில்
நனைந்தபடி
நடக்கலாம்
என்ற ஆசையில்
நானும் !!
ஆளுக்கு ஒரு ஓரமாய்
நிற்கிறோம்
மழையை பார்த்தபடி
நம்மை பிரித்த
சந்தோஷத்தில்
மண்ணில் விழுந்து
நக்கல் செய்கிறது
மழை ! !

குரு (நன்றி " வாசல்)

# பிரான்ஸில் குடும்ப நல நிதி

பிரான்சில் வதிவிட அனுமதியுள்ளஅனைவரும் இந்த நிதியைப் பெற முடியும். இந்த நிதி என்பது, அரசு ஒதுக்கீட்டில் இருந்து பெறப்படுவதல்ல. மாறாக பிரான்சில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் தங்கள் சம்பளத்தில் இருந்து கொடுக்கும் பணம் தான், குடும்ப நல நிதியாக மாறுகின்றது. இதை சமூக நிதியாக்கி, குடும்பத்தின் தேவைக்கு ஏற்ப மீள பகிர்ந்தளிக்கப்படுகின்து.

இந்த குடும்பநல நிதியை, எம் சம்பளத்தில் இருந்து இரண்டு வடிவங்களில் அரசு அறவிடுகின்றது.

1. தீர்மானிக்கப்பட்ட எமது சம்பளத்தில் இருந்து, ஒரு பகுதி முதலாளி ஊடாக அறவிடுகின்றது.
2. மற்றொரு பகுதியை முதலாளியிடம் நேரடியாக அறவிடுகின்றது.

இப்படி பல சமூக நலத் திட்டங்களுக்கு எமது உழைப்பில் இருந்து திரட்டும் பணம் தான், குடும்ப நல நிதியமாக தரப்படுகின்றது. இது அரச உதவியல்ல. அரசு உங்கள் பணத்தைப் பெற்று, சமூகத்தின் தேவை சார்ந்து அதை மீள பகிர்ந்தளிக்கின்றது. இதற்குள் பல சமூக நலத் திட்டங்கள் உண்டு. அதற்கான தகமையுடைய அனைவரும் அதைப் பெற முடியும். அதில் சிலவற்றை மட்டும் பார்ப்போம். (31.12.2010 வரையான காலத்துக்கு இந்தத் தரவுகள் பொருந்தும்)

## 1. குழந்தைகளுக்கான குடும்ப நிதியம்

**A.** 18 வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு சமூக நிதியம்

இரண்டு குழந்தை இருப்பின் 123.92 ஈரோக்களை மாதம் பெறமுடியும்.

மூன்று குழந்தை இருப்பின் 282.70 ஈரோக்களை மாதம் பெறமுடியும். மேலதிகமான ஒவ்வொரு குழந்தைக்கும் 158.78 ஈரோக்களை மாதம் பெறமுடியும்.

B. 11 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிகமான சமூக நிதியம்.

11 — 16 வயது வரை 34.86 ஈரோக்களை மாதம் பெறமுடியும்.
16 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு 61.96 ஈரோக்களை மாதம் பெறமுடியும். இது போல் 30.04.1997 பின் பிறந்தவர்கள் தமது 14 வயதில் 61.96 ஈரோக்களை மாதம் பெறமுடியும்.

C. 20 வயது வரை குழந்தை உங்கள் வீட்டில் இருந்தால் விசேட சமூக நிதியம்

மூன்று குழந்தைகள் 20 வயதுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். 18 தாண்டிய குழந்தை 823.54 யூரோகள் மேல் சம்பளம் பெறாதவராக இருக்க வேண்டும். அவர் தனது 21 வது பிறந்த தினம் வரை 78.36 ஈரோக்களை மாதம் பெறமுடியும்.

A,B,C இம்மூன்றையும் பெறுவதற்குரிய அடிப்படையை, குடும்பத்தின் வருட வருமானமே வரையறை செய்கின்றது.

ஒரு குழந்தை என்றால் பெற்றோர் வருட வருமானம் 22 946 யூரோக்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும்.
இரு குழந்தை என்றால் பெற்றோர்வருட வருமானம் 28 241 யூரோக்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும்.
மேலதிக ஒவ்வொரு குழந்தைக்கும் 5295 யூரோக்களால் இத்தொகை மேலும் அதிகரிக்கின்றது

## 2. குழந்தைக்கான சமூக வழங்கல்கள்

A.குழந்தை தாய் வயிற்றில் தங்கிய 6 மாதத்தில் இருந்து 177.95 யூரோக்களை மாதம் பெற முடியும். இதை குழந்தை தனது மூன்று வயது வரை பெறமுடியும்.

B. குழந்தை பிறந்தவுடன், குழந்தையின் தேவை கருதி 889.72 யூரோக்கள் சிறப்பு சமூக நிதியம் வழங்கப்படுகின்றது. இதுவே தத்தெடுத்த குழந்தையாக இருந்தால் 1779.43 யூரோக்களை சிறப்பு சமூக நிதியமா வழங்கப்படுகின்றது.

இதை பெறுதற்கான வருட வருமான எல்லைகள் உண்டு.
1. வருடம் குறைந்தது 4534.32 யூரோக்களை வருமானமாகப் பெறவேண்டும்.
2. ஒரு குழந்தைக்கு வருட வருமானம் தனிநபர் என்றால் 33731 யூரோக்களும் இருவர் வருமானம் என்றால் 44.576 யூரோகளும் உட்பட்டவர்களுக்கு இது கிடைக்கும்.
இரு குழந்தைக்கு வருட வருமானம் தனிநபர் என்றால் 40.477 யூரோகளும் இருவர் வருமனம் என்றால் 51.322 யூரோகளும் உட்பட்டவர்களுக்கு இது கிடைக்கும்.
மேலதிக குழந்தை ஒவ்வொன்றுக்கும் 8.096 யூரோகளால் இத்தொகை அதிகரிக்கும்.

## 3. பாடசாலை செல்லும் குழந்தைகான சமூக நிதியம்.

இது ஒரு வகுப்பை படித்து முடித்து அடுத்த வகுப்புக்கு செல்லும் மாணவர்களுக்கு கிடைக்கின்றது. பாடசாலை பொருட்களை வாங்க இது உதவுகின்றது.

A. 6 முதல் 10 வயது குழந்தை 280.76 யூரோக்களை வருடம் பெறமுடியும்.

B.11 முதல் 14 வயது குழந்தை 296.22 யூரோக்களை வருடம் பெறமுடியும்.
C.15 முதல் 18 வயது குழந்தை 306.51 யூரோக்களை வருடம் பெறமுடியும்.

இதை பெறுதற்கான வருட வருமான எல்லைகள் உண்டு.

1. 2010 —2011 கால சமூக நிதியைப் பெற குழந்தை 16.09.1992 க்கும் 31.01.2005 இடையில் பிறந்தவராக இருக்கவேண்டும்.
2.வேலை செய்யும் குழந்தை 823.54 அடிப்படை, அதாவது 55 சதவீதம் அடிப்படை சம்பளத்தை விட குறைவாக பெற வேண்டும்.
3. 6 வயது குழந்தை என்றால் 1.2.2005 முன்னர் பாடசாலையில் பதிவுசெய்திருக்கவேண்டும். .
4. ஒரு குழந்தை என்றால் 22946 யூரோக்களுக்கு குறைவான வருட வருமானம் உள்ளவர்கள் இதைப் பெறமுடியும்.
மேலதிக ஒவ்வொரு குழந்தைக்கும் 5295 யூரோக்களால் இந்தத் தொகை அதிகரிக்கின்றது.

## 4. தனியார் பாடசாலையில் குழந்தை கல்விகற்றால்...

ஒரு குழந்தைக்கு 97.14 யூரோக்களை மாதம் பெறமுடியும்.
இதுவே விவாகரத்துப்பெற்ற இரு பெற்றோரின் குழந்தை என்றால் 116.18 யூரோக்களை மாதம் பெறமுடியும்.

5. இது போன்ற பல சமூக நல திட்டங்கள் நிபந்தனைக்கு உட்பட்டு உண்டு.
**A**. வீட்டு வாடகைக்கு அல்லது வீட்டுக் கடன்
2. வேலை பெற்று சென்றால் 1000 யூரோக்கள் சிறப்பு உதவி
**B**. வலது குறைந்தோருக்கான சிறப்பு சமூக நல நிதியம்
**C**. வீடு விட்டு வீடு மாறும் போது கொடுக்கும் சமூக நல நிதியம்
**D**. குழந்தையின் பிற செயல்பாட்டுக்கு
**E**. குழந்தையின் சிறப்பு கல்வி மற்றும் தொழில் தகமைக்கு

இப்படி எண்ணற்ற சமூக நல நிதிய கொடுப்பனவுகள் உள்ளது. இவை பற்றி மேலும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள அவர்களின் அலுவலகத்தை நாடவும். அல்லது அவர்களின் இணையத்திலும் பார்வையிடலாம்.
இணைய முகவரி www.caf.fr

**தொகுப்பு : சிறீ**




# காதலர் தினம்

**பெப்ரவரி 14**, எங்கு பார்த்தாலும் இனம்தெரியாத மகிழ்ச்சி, இரயில்களிலும், பேருந்துகளிலும் பொது இடங்களிலும் கையில் சிவப்பு ரோஜா, பரிசுப் பொருட்கள் ஏந்திய தினசரிக் கவலைகள் மறைந்து புன்னகை பூத்த முகங்கள். இன்றைய நிலையில் வயது வரம்பின்றி, மத இன பேதமின்றி வாழ்த்து பரிமாற்றங்கள், ஆடல் பாடல்கள், குதூகல நிகழ்வுகள். உலகில் அரிதாக அனைவராலும் கொண்டாடப் படும் ஒருசில நிகழ்வுகளில் காதலர் தினம் (St. Vantine's day) முக்கிய நாளாகவே உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ரோமானிய பகுதியில் கொண்டாடப்பட்ட நிகழ்வு இன்று உலகம் முழுவதும் பரவிற்று. மலர்கள், வாழ்த்து அட்டைகள், பரிசுப்பொருட்கள் என தனது காதலின் ஆழத்தை வெளிப்படுத்தவும், தனது காதலனையோ, காதலியையோ மகிழ்விக்கவும் ஒரு சிறப்பு நாளாகவே இந்நாள் உள்ளது.

இப்படி உலகம் முழுவதும் ஒருங்கே கொண்டாடும் இந்நிகழ்வு 4ம் நூற்றாண்டு முதல் கொண்டாடப் படுவதாக உறுதிப்படுத்தாத தகவல்கள் தெரிவிக்கின்றன. 4ம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த ரோமானிய பேரரசன் இரண்டாம் கிளாடியஸ் அந்நாட்டின் போர் வீரர்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு இளைஞர்கள் தமது காதல், குடும்பமாக வாழ விரும்பி படையில் இணைவதில்லை என எண்ணி, இளைஞர்கள் திருமணம் செய்வதற்கு தடை விதித்தார். அதே காலத்தில் வாழ்ந்த கிறிஸ்துவ பாதிரியார் புனித வலன்ரின், அரசனுடைய இத்திட்டத்தை பலமாக எதிர்த்தோடு இளைஞர்கள், யுவதிகளுக்கு இரகசிய திருமணம் செய்து வைத்தார். இதையறிந்த அரசன் அவரை கைது செய்து சிறையிலடைத்து மரண தண்டனையும் வழங்கினான்.

புனித வலன்ரைன் சிறையில் வாழ்ந்த காலத்தில், அச்சிறை அதிகாரியான அஸ்ரீயஸ் என்பவரது மகளோடு ஆழ்ந்த நட்பு கொண்டிருந்தார். அவரது மரண தண்டனை நிறைவேற்றுகையில், சிறை அதிகாரியிடம் ஒரு காகிதம் பெற்று அதில் தமது நட்பிற்கு பிரியாவிடை எழுதி **உனது வலன்ரிடமிருந்து** எனக் குறிப்பிட்டார். அவர் வாழ்ந்த காலத்திலேயே, காதலர்களின் நண்பர் என அழைக்கப்பட்ட வலன்ரினின் நினைவாக காதலர் தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது. இத்தினம் பெப்ரவரி 14ம் திகதி கொண்டாடப்படுவதன் சரியான நோக்கம் அறியப்படவில்லை. எனினும் இது புனித வலன்ரன் அவர்களின் பிறப்பு அல்லது இறப்பின் நினைவு நாளாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

உங்கள் உள்ளத்திலும் ஒரு காதல் இருக்கலாம். காத்திருந்து, காதல் கடிதம் எழுதி, கவிதை வரைந்து உங்களுக்கென பிறந்த காதலை நீங்கள் அடைந்திருக்கலாம். இன்றும் உங்கள் காதல் எத்தடையையும் தாண்டி வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கலாம். இத்தனை சிறப்புமிக்க உங்கள் காதல் மென்மேலும் வாழ வாழ்த்தி நிற்கும் இந்நேரம், உங்கள் காதல் எவ்வளவு ஆழமானது என்பதை தெரிந்து கொள்வது மேலும் உங்கள் உறவை ஆழப்படுத்த உதவும் அல்லவா?. கீழே உள்ள கேள்விகளுக்கு ஆம், இல்லை என முழுதாக சிந்தித்து பதில் கூறுங்கள். பின் கீழே குறிப்பிட்டுள்ள வாசகங்கள் உங்களுக்கு காதலின் ஆழத்தையும், அன்பையும் மெருகூட்ட உதவும்.

1. உங்களுடைய சுய அல்லது இரகசிய தவகல்களை உங்கள் காதலி/காதலனோடு பகிர்ந்து கொள்கிறீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
2. நீங்கள் தினந்தோறும் பல தடவைகள் உங்கள் காதலன்/காதலியின் உருவத்தை நினைக்கிறீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
3. உங்கள் இருவரின் முடிவுகளில் வேறு ஒருவர் தலையிடுவதை ஏற்றுக்கொள்வீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
4. நீங்கள் உங்கள் காதலன் / காதலிக்கு ஏற்றஉறுதுணையாகஇருக்கின்றீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
5. உங்கள் காதல் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்க வேண்டுமென நினைக்கிறீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
6. நீங்கள் உங்கள் காதலன் / காதலியைத் தவிர வேறு யாராவது உங்களை மகிழ்விக்க முடியும் என நினைக்கிறீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
7. உங்கள் காதலன் / காதலியின் எதிர்காலத்திற்கு நீங்கள் முழுப்பொறுப்பு ஏற்கத் தயாராக உள்ளீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
8. உங்கள் காதலன் / காதலி மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
9. உங்கள் காதலன் / காதலியை நீங்கள் முழுமையாக புரிந்து கொண்டுள்ளீர்களா?
   ஆம் ◯ இல்லை ◯
10. உங்களை எந்த சக்தியும் பிரிக்க முடியாது என நம்புகிறீர்களா?
    ஆம் ◯ இல்லை ◯



நீங்கள் எட்டு வினாக்களுக்கு மேல் ஆம் எனப் பதிலளித்திருந்தால் உங்கள் காதல் உண்மையிலேயே ஆழமான காதல். தொடர்ந்து இதே நம்பிக்கையும், அன்பும் கொண்டு வாழ எமது வாழ்த்துக்கள்.
நீங்கள் ஐந்து முதல் எட்டு வரையில் ஆம் எனப் பதிலளித்திருந்தால் உங்கள் காதல் சாதாரணமான காதல். பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கவும், அதை ஏற்கவும் நீங்கள் தயாராக இல்லை. கவனமாக செயல்பட்டு உங்கள் காதல் வளர வாழ்த்துக்கள்.
நீங்கள் ஐந்து கேள்விகளுக்கும் குறைவாக ஆம் என பதிலளித்திருந்தால் உங்கள் காதல் மிகவும் பலவீனமானது. சிறு பிரச்சினையோ அல்லது நெருடலோ வந்தால் நீங்கள் பிரிந்து செல்லவும் வாய்ப்பு உள்ளது. மிகவும் கவனம் தேவை. அன்பே அனைத்திலும் சிறந்தது. அதிக அன்பு செலுத்தி உங்கள் காதலை வளப்படுத்த எமது வாழ்த்துக்கள்.

தொகுப்பு : சிவா


இது ஒரு கிருஷ்ணா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# அழகாக தோன்றுவது எப்படி?



என்றும் பதினாறு போல் வாழவும் முதுமை எம்மை நெருங்காதிருப்பதையுமே நாம் அனைவரும் விரும்புகின்றோம். இளமையாகவும் அழகாகவும் நீங்களும் தோன்ற பயனுள்ள பத்து வழிகள் இதோ!!

1. ஒவ்வொருநாளும் நிறைய தண்ணீர் குடியுங்கள். நன்றாக தூங்குங்கள். இது உங்கள் உடலையும், தோலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுவதோடு கண்களின் கீழ் கருவளையம் உருவாவதையும் தடுக்கின்றது.
2. அழகு இளம்பாராயத்தினூடேயே ஆரம்பிப்பதால் எப்போதுமே அளவாகவும், ஆரோக்கியமாகவும் உணவு உட்கொள்ளுங்கள். அதேசமயம் சிறியளவில் எனினும் ஒழுங்காக உடற்பயிற்சி செய்யுங்கள். (நீந்துதல், நடத்தல், சைக்கிள் ஓடுதல் போன்றன)
3. உங்கள் பற்கள் மீது கவனமாக இருங்கள் குறைந்தது இரு தடவையாவது பிரஸ் செய்யத் தவறாதீர்கள்
4.தலைமுடியினை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதுடன் ஒழுங்குமுறையொன்றில் அதனை கழுவுங்கள் இதற்காக நல்ல சாம்போவினையும் அதற்கேற்ற கண்டிசனரையும் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். (இயற்கையான பொருட்கள் சிறந்த பயனை கொடுக்கும்)
5. தலைமுடியில் நரைமுடிகள் தென்படின் பொருத்தமான சாயங்களை உபயோகிப்பதன் மூலம் அழகாகவும், நவீனகாலத்திற்குரியவராகவும் உங்களால் தென்பட முடியும்.
6. உங்களுடைய இயற்கையான தோற்றத்திற்கு ஏற்றமாதிரியான மஸ்காரா (mascara), உதட்டுச் சாயம் (lip gloss), kayal என்பவற்றை தெரிவுசெய்யுங்கள்.
7. உடலையோ அல்லது முகத்தினையோ கழுவிய பின் நன்றாக ஈரத்தினை துடைத்துக்கொள்ளுங்கள். இது தோலினை மிருதுவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும்.
8. பகலில் வெளிச் செல்லும்போது தீங்கு விளைவிக்கும் uv கதிர்வீச்சில் இருந்து தோலினை பாதுகாக்க சன்ஸ்கிரீன் லோசன் (sunscreen lotion or cream) பூச மறக்காதீர்கள்.
9. நீங்கள் எப்போதும் சுத்தமாகவும், இனிய மணம் கொண்டவராகவும் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். உங்களிற்கு ஏற்ற பேபியும்(perfume) இனை கழுத்திலும், மணிக்கட்டுக்களிலும் பூசி கொள்ளுங்கள்.
10. உங்களில் நீங்கள் மிகுந்த நம்பிக்கையுள்ளவராக எந்நேரமும் இருங்கள். உங்களால் செய்யக்கூடிய மிகச்சிறந்த பயனை தரவல்லது.

தகவல் — யாழி

# மொபைலில் தமிழ் தளங்களின் எழுத்துரு பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறை



1. உங்கள் மொபைலில் GPRS வசதியை உயிர்ப்பித்து கொண்டு மொபைல் மூலம் http://www.opera.com/mini/ இணையதளத்திற்கு சென்று ஓபேரா மினி தரவிறக்கி உங்கள் மொபைலில் நிறுவிக் கொள்ளுங்கள்.

2. மொபைலில் நிறுவிய ஒபேரா மினி உலாவியை திறந்து கொள்ளுங்கள். பின்பு அட்ரஸ் பாரில் opera:config என்று கொடுத்து OK கொடுக்கவும்.

3. தோன்றும் பக்கத்தில் Use bitmap fonts for complex scripts menu என்பதில் enable Yes கொடுத்து save செய்யவும்.

4. ஒபேரா மினி உலாவியை மூடி விட்டு மீண்டும் திறக்கவும்.

இனி உங்கள் மொபைலில் நீங்கள் தமிழ் இணைய தளங்களை எந்த தடை இன்றியும் பார்க்கலாம்.

முயற்சி செய்து பாருங்கள்.!



வென்றுவிட்டீர்களா?
OK
வெறும் நன்றி மட்டும் சொன்னால் போதும்.

தகவல் : மருதப்ப

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் வீட்டின் திடீர் விருந்தினரை மகிழ்விக்க....

## மரக்கறி பஜ்ஜி




தேவையான பொருட்கள்
200 கிராம் பூக்கோவா
200 கிராம் புறக்கோலி
200 கிராம் கரட்
200 கிராம் குடைமிளகாய்
150 கிராம் கடலைமா
150 கிராம் கோதுமை மா
தேவையான அளவு உப்பு, மிளகாய்த்துாள், மிளகு துாள்

பூக்கோவா, புறக்கோலி, கரட், குடைமிளகாய் இவற்றை சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும்.
இவற்றை அரையவியலாக அவிக்கவும். steamer இல் 180°F இல் நீரை கொதித்தபின் 3 நிமிடங்கள் அவியவிடவும்.
கடலைமா, கோதுமை மா, தேவையான அளவு உப்பு, மிளகாய்த்துாள், மிளகு துாள் இவற்றை எடுத்து அளவாக தண்ணீர் சேர்த்து கூழ் போல கலக்கவும்.
மரக்கறியினை அந்த கூழினுள் கலக்கிய பின் அதனை எடுத்து வாணலியில் பொன்நிறத்தில் பொரித்தெடுக்கவும்.

மரக்கறி பஜ்ஜி தயார்.
பஸ்மதி அரிசி சோற்றுடன் மரக்கறி பஜ்ஜி சேர்த்து சிறிதளவு சில்லி பேஸ்ற் உடன் சுடச்சுட பரிமாறலாம்.

—யாழி

# ஈழத்தில் நாடகமும் நானும்



— கலையரசு சொர்ணலிங்கம்

நாடகத்துறையில் ஆர்வம்கொண்ட எவரும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களைப் படிக்காது ஒரு அடிகூட நகரக்கூடாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

கலையரசு அவர்கள் மூன்று தலைமுறைகளுக்கான ஒரு பாலம், ஒரு நூற்றாண்டின் நாடக வரலாறு.

*அவரது ஈழத்தில் நாடகமும் நானும்* என்னும் நூலைப்படித்தபோது மலைத்துப்போனேன். நாடகம் ஒன்றும் லேசுப்பட்ட காரியமில்லை. நாடகம் மட்டுமல்ல எந்தப்படைப்பும் இழப்புக்கள் இல்லாமல் இல்லை. உடல் வருத்தாது எதுவுமில்லை. கலையுடன் உண்மையான ஈடுபாடு இல்லாமல் எதுவும் சாத்தியமில்லை. கலையரசு அவர்கள் ஒரு சாதனையாளராக ஒரு நூற்றாண்டின் பின்பும் எம்முன் எழுந்துவருகிறார் என்றால் அவர் கலைமீது கொண்ட காதல் அன்றிவேறில்லை. தவிரவும் கலையரசு அவர்களுக்கு சூழலும் வாய்த்திருக்கிறது. பக்குவப்பட்ட தந்தை, குடும்பம், நல்ல ரசிகர்கள், சினிமாக்களே இல்லாத ஆரம்பகாலம் எல்லாமே அவருக்கு அனுகூலமாய் அமைந்திருந்திருக்கின்றன. கலையரசு அவர்கள் நல்ல பாடகராக இருந்திருக்கிறார், ஆர்மோனிய வாத்தியத்தில் தேர்ச்சி பெற்றவராய் இருந்திருக்கிறார்.

*கலையரசு நாடகமாடுவது ஒன்றும் அதிசயமல்ல அவர் அவ்வாறு செய்யாதிருந்தால்தான் அதிசயம்* என்கிறார் ஒரு விமர்சகர். உண்மைதான். அந்தளவுக்கு சூழல் அவருக்கு கைகொடுத்திருக்கிறது. அதை அவர் கையகப்படுத்தியிருக்கிறார். வெற்றி கண்டிருக்கிறார்.

*நாடகமே என் நினைவு, நாடகமே என் கனவு, நாடகமே என் இன்பம், நாடகமே என் கவலை, நாடகக் கலையே என் தெய்வம்* என்று வாழ்ந்த கலையரசு அவர்களின் வாழ்க்கை உயர்ந்தது. அவர் வாழ்ந்திருக்கிறார். அதனால் இன்றும் வாழ்கிறார்.

அவரது அனுபவத்தை படிக்கும் பல இடங்களில் உணர்ச்சிப்பெருக்கில் எம்நெஞ்சம் விம்முகிறது. நாடகக் கலையில் எவ்வளவு நுணுக்கங்கள். எவ்வளவு நேர்த்தியான ஒழுங்குகள், நாம் அறியாத அறிந்திருக்கவே முடியாத பல விடயங்கள் நூலில் விரவிக்கிடக்கின்றன. இந்த நூல்கூட முழுமையானதல்ல. கலையரசு அவர்கள் தனது அனுபவங்களை இன்னும் சில காலம் முந்தி பதியத் தொடங்கியிருப்பாரனால் இன்னும் பல விரிவான தகவல்களையும் அனுபவங்களையும் அவர் எமக்குத் தந்திருக்கமுடியும்.

ஐந்து — ஆறுமணிநேர நாடகங்கள், பிரமிப்பைத்தரும் காட்சி அமைப்புக்கள், உத்திகள் எல்லாம் இன்னும் விரிவாகப் பேசப்பட்டிருக்கவேண்டும். நாடகக்கலை கண்ணுக்குத் தெரியாமலே சினிமாவுக்குள் கரைந்துபோன விதம் பற்றிக்கூறப் பட்டிருக்கவேண்டும். இவருடைய நாடகங்களிலே நகர்ப்புறத்தினரே அதிகம் ஆதரவாளராகவும், அனுதாபிகளாவும் இருந்திருக்கின்றனர். ஆனால் அறுபது, எழுபதுகளுக்கு பிற்பட்ட காலங்களில் நாடகக்கலை அப்படியாயிருக்கவில்லை. அவை கிராமப்புறங்கள், அல்லது பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியிலேயே வாழ்ந்திருக்கிறது. இவற்றிற்கான காரணங்களை எல்லாம் அறிந்துகொள்ள எவ்வளவு ஆவலாயிருக்கிறோம்.

கலையரசு அவர்கள் வெறும் நடிகரல்ல. அவர் பல்துறை சார்ந்த ஆற்றல் மிக்கவர். தனிப்பட்டவிருப்பு வெறுப்புகளுக்கப்பால் கலையைத் தரிசிக்கக்கூடிய நேர்மையாளர். அவரிடம் கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறது. ஆனால் எமக்கு கிடைத்திருப்பதோ இச்சிறு நூல் தான். இந்நூலையாவது வெளிக்கொணர உதவிய திரு. ரகுநாதன், பாரிஸ்டர் யோசேப் அவர்களுக்கும், நூல் அறிமுக நிகழ்வில் இந்நூலை வாசிக்கத்தூண்டிய திரு. முகுந்தன், திரு. தங்கேஸ் ஆகியோருக்கும் நன்றிகள்.

— அசோகா


## கிருஷ்ணா அச்சகம்

73, Rue Doudeauville
75018 Paris
M°: Château Rouge

Tél.: 01 42 51 29 92


ஆசிரியர் சச்சிதானந்தம்
அவர்களின்

## தெளிவான பிரெஞ்சு இலக்கணம்




. . . ஒரு தாய்மொழியாளன் தனது மொழியின் இலக்கணத்தைப் படித்து அறிவு பெற்ற பின்னர், தன் தாய் மொழியைப் பேசுவதில்லை. பெயர்ச்சொல் எதுவென்றோ, வினைச்சொல் எதுவென்றோ தெரியாமல் பிழையின்றி தன் மொழியைப் பேசமுடியும். ஆனால் ஒருவர் ஒரு பிறமொழியை சரியாகப் பேசவேண்டும், எழுத வேண்டும் எனில் அப்பிற மொழியின் இலக்கணம் அறிந்திருத்தல் அவசியம்.

. ..இலட்சணம் என்றாலும், இலக்கணம் என்றாலும் அழகு என்று பொருள். சரியான இடத்தில் சரியான சொற்களை கையாளும் கலைதான் இலக்கணம். இலக்கணம் என்பது ஒரு மொழியினைச் சரியாக பேசவும், கதைக்கவும், எழுதவும் கூறும் விதிகளைப் பற்றிய படிப்பு....

மொழி அகம், புறம் என இரு அமைப்புக்களைக் கொண்டது. எழுத்து, இலக்கணம் என்பன அக அமைப்பாகவும், சொல், பொருள் என்பன புற அமைப்பாகவும் உள்ளன. அதனடிப்படையில் தெளிவான பிரெஞ்சு இலக்கணம் — வினைச்சொல் எனும் இந்நூல் பிரெஞ்சு மொழியின் அக அமைப்பைக் கூறுகின்றது.

தெளிவான பிரெஞ்சு இலக்கணம் — வினைச்சொல் எனும் நூல் பிரெஞ்சு மொழியின் வினை இலக்கணத்தை அக்குவேறு ஆணிவேறாக அறிந்து கொள்வதற்கு என ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்நூல் இளையோர், மாணவர், பெரியோர், ஆசிரியர், ஏகலைவர் என அனைத்துத் தரப்பட்டவர்களும் பயன்பெறும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

பொதுவாக எதையும் ஆற அமரப் படிப்பதற்கு இன்றைய வாழ்க்கைமுறை ஆதரவாக இல்லை. தேவை, ஆசை, நாட்டம்

முதலானவை குறைவு அல்லது இன்மை போன்ற இன்னோரன்ன காரணங்களால் வாசிக்கும் இயல்பு, படிக்கின்ற ஆர்வம், அறிவுத்தேடல் ஆகியன மக்களிடம் மிக குறைந்து வருகின்றது.

மக்களை படிக்க, வாசிக்க தூண்ட வேண்டும் எனில் இலக்கண நூல்கள் பழைய முறையை விட்டு புதுமுறையில் எழுதப்படவேண்டும். அந்த வகையில் இந்த பிரெஞ்சு வினைச்சொல் இலக்கணத்தின் ஆழத்தை எளிதாகவும் தெளிவாகவும் அறியும் வகையில் கேள்வி — பதில் முறையில் புதுவிதமாக பொத்தப் பட்டிருக்கின்றது. இம்முறை குறுகிய காலத்தில் அறிவை வளர்க்க கூடியது.

— நூலின் புறவுரையிலிருந்து..

நூலினைப் பெற்றுக்கொள்ள..
70, rue Philippe de girard - 75018 Paris

— பிரெஞ்சு பிரான்சில் பிறந்த மொழி

— இம் மொழி கோலுவா(gaulois), இலத்தீன்(latin), ப்ராங்க்(franc) ஆகிய மொழிகளின் கலப்பால் உருவான பெருமொழி.

— ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக நாடுகளில் பேசப்படும் செல்வாக்கான மொழி

— உலகில் ஆங்கிலத்துக்கு அடுத்த நிலையில் உள்ள சர்வதேச மொழி.

— முப்பத்தாறு நாடுகளில் வழங்கப்படும் பிரதான மொழி.

— இந்தோ — ஐரோப்பிய குடும்பத்து மொழிகளில் சிறப்புக்கள் அதிகம் கொண்ட செம்மொழி.




# பேஸ்புக்கின் வெற்றிக்களிப்பு

இன்று உலகில் அதிகமானோரால் பயன்படுத்தப்படும் இணையத்தளங்களுள் கூகிள் (Google) இற்கு அடுத்தபடியான இரண்டாம் இடத்தில் பேஸ்புக் சமூக இணையத்தளம் இருக்கின்றது. 2004இல் 26 வயது நிரம்பிய மார்க் சுக்கர் பேர்க் என்ற அமெரிக்க மாணவரால் ஆரம்பிக்கப்பட்ட சிறிய ஓர் இணையத்தளம் தற்போது 35 கோடி மக்களால் பாவிக்கின்ற அளவிற்கு வளர்ச்சியடைந்து பிரபல்யம் அடைந்துள்ளது. அதாவது உலகின் 20பேருக்கு ஒருவர் இந்த இணையத்தளத்தை பாவிக்கின்றனர். அதில் 80% மான பாவனையாளர்கள் 15 வயது தொடக்கம் 24 வயது வரை உள்ளவராக உள்ளனர் என்று கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. உலகெங்கும் உள்ள மூன்று பேருக்கு ஒரு மாணவர் இதில் உறுப்பினராக இருந்து மற்றைய மாணவர்களுடன் தொடர்புகளை பேணுகின்றார். இவர்கள் தங்கள் படங்களை, வீடியோக்களை இதில் பதிவுசெய்து தாங்கள் விரும்பிய நண்பர்களை பார்வையிட வைக்கின்றனர். தங்கள் நண்பர்களுடன் கண நேரத்தில் உரையாடலில் ஈடுபடுகின்றனர். பிரான்ஸில் மாத்திரம் ஒன்றரைக் கோடி பேர் இந்த இணையத்தளத்தில் உறுப்பினராக உள்ளனர். இவ் இணையத் தளங்களின் வளர்ச்சி யாரும் எதிர்பார்க்காத வண்ணம் கடந்த 6 ஆண்டுகளில் பெருவளர்ச்சி கண்டு உலகெங்குமுள்ள மக்களை ஈர்த்துள்ளது. பல்கலைகழகத்தில் கல்விகற்கும் மாணவரான மார்க் அங்கிருந்த கணணிகளில் இருந்த மாணவிகளின் போட்டோக்களை களவாக எடுத்துள்ளார். பின்னர் உடனடியாக ஓர் சிறிய இணையத்தளத்தை உருவாக்கி அதில் செக்சி(sexy) ஆக உள்ள மாணவிக்கு வாக்குகள் போடும்படி கேட்டுள்ளார். இச்சம்பவத்தின் பின் இந்த மாணவன் பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். ஆனால் இவர் இணையத்தளங்களில் போட்டோக்கள் வெளியிட்ட பின்னர் ஒரு மாதத்திற்குள் அமெரிக்க கவாட்(Havard) பல்கலைக்கழக மாணவர் முழுவதும் இந்த இணையத்தளத்தில் உறுப்பினராகினர். அதன் பின்னர் மற்றைய அமெரிக்க பல்கலைக்கழகங்களில் இருந்தும் பெருமளவில் மாணவர்கள் இணைந்தனர். அதனைத் தொடர்ந்து உலகம் முழுவதும் இருந்து மாணவர்கள் உட்பட கோடிக்கணக்கானவர்கள் இந்த சமூக இணையதளத்தில் இணைந்தவண்ணம் உள்ளனர். இவ் இணையத்தளத்தை உலகின் முதல்தர வர்த்தக இணையத்தளமான கூகிள்(Google) தற்போது வாங்குவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மிகுந்த நுணுக்கத்துடனும் கற்பனை வளத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட இந்த இணையத்தளம் தற்போது 150 கோடி டொலர்கள் பெறுமதி உடையதாக உள்ளதோடு 100 கோடி மக்களை விரைவில் தன்னகத்தே ஈர்க்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.


லாச்சப்பலில்

## சங்கீதா அச்சகம்

உங்கள் எண்ணம் போல்
பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, திருமண அழைப்பிதழ்கள்
புத்தம் புதிய டிசைன்களில் அச்சடித்துப் பெற்றுக்கொள்ள
மற்றும் உங்கள் வர்த்தகத்தேவைகளுக்கான விளம்பரங்கள்,
விளம்பர அட்டைகளை குறைந்த செலவில் பதிப்பித்துக்கொள்ள
இன்றே நாடுங்கள்!

**39, Bld de la Chapelle - 75010 PARIS Métro : La Chapelle**
**Tél.: 01 44 72 08 94**